# Board of Apprenticeship Training (Southern Region)
# Chennai – 113

## Schedule of apprentices selection for TANGEDCO / TANTRANSCO for the year 2014-15

| Phase | Name of Electrical Distribution Circle and districts covered | Period of Selection | Probable Date of downloading Call letter online |
|---|---|---|---|
| I | • Region – Vellore<br>Districts;<br>Dharmapuri, Krishnagiri, Vellore, T.V. Malai | 2nd – 6th Feb'2015 | 28th Jan 2015 onwards |
| II | • Region – Madurai<br>Districts;<br>Dindigul, Madurai, Ramanad, Sivagangai, Theni | 16th – 20th Feb'2015 | 11th Feb 2015 onwards |
| | • Region – Tirunelveli<br>Districts;<br>Thoothukudi, Virudhunagar, Tirunelveli, Kanniyakumari | | |

www.tnebes.org

| | | | |
|---|---|---|---|
| III | • Region – Villupuram<br>Districts;<br>Villupuram, Cuddalore,<br>(Partly Perambalur & Ariyalur) | 2nd – 6th March, 2015 | 24th Feb 2015 onwards |
| | • Region – Erode<br>Districts;<br>Namakkal, Erode, Salem | | |
| | • Region – Coimbatore<br>Districts;<br>Tirupur, The Nilgiris<br>(Partly Namakkal & Salem) | | |
| IV | • Region - Chennai<br>North & South<br>Districts;<br>Tiruvallur, Kancheepuram,<br>Chennai districts | 9th – 13th March, 2015 | 3rd March 2015 onwards |
| | Region – Trichy<br>Districts;<br>Pudukottai, Thanjavur,<br>Thiruvarur, Karur, Nagapattinam,<br>Perambalur, Trichy,Ariyalur | | |
| | Hydro and Thermal Power Plants<br>All Districts in the order of<br>following regions:<br>1) Trichy<br>2) Madurai<br>3) Tirunelveli<br>4) Vellore<br>5) Erode<br>6) Other Region | | |

Director

BOAT (SR)

Chennai

www.tnebes.org

தொழில் பழகுநர் பயிற்சி நேர்காணல்

தி இந்து

# ஆன்லைனில் அழைப்புக் கடிதம் புதிய சேவை தொடக்கம்

29.1.2015

**சென்னை**

மத்திய தொழில் பயிற்சி வாரியத்தால் வழங்கப்படும் தொழில் பழகுநர் பயிற்சி நேர்காணலுக்கான அழைப்புக் கடிதத்தை ஆன்லைனில் பெறும் சேவை சென்னையில் நேற்று தொடங்கப்பட்டது.

மத்திய தொழில் பயிற்சி வாரியம் சார்பில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் பழகுநர் பயிற்சிக்கு நேர்காணலுக்கு செல்வதற்கான அழைப்புக் கடிதத்தை ஆன்லைனில் வழங்கும் சேவை சென்னை சாஸ்திரி பவனில் நேற்று தொடங்கிவைக்கப்பட்டது. மத்திய தொழில் பயிற்சி வாரியத்தின் தென் மாநில இயக்குநர் ஏ.அய்யா கண்ணு இச்சேவையை தொடக்கி வைத்தார். தொடக்கவிழாவில் அவர் பேசியதாவது:

எங்கள் வாரியத்தில் ஓராண்டு தொழில் பயிற்சி வேண்டி ஏராளமானோர் பதிவு செய்கின்றனர். அவர்கள் நேர்காணலில் பங்கேற்பதற்கான அழைப்பு கடிதங்கள் கிடைப்பதில் பல் வேறு சிரமங்கள் உள்ளன. அதை தவிர்க்கும் விதமாக ஆன்லைனில் அழைப்புக் கடிதத்தை பெறும் சேவையை தொடங்கியிருக்கிறோம். இச்சேவையை http://www.boatsr-apprentice.tn.nic.in/ என்ற இணையதளத்தில் இருந்து பெறலாம். இதில் பதிவு எண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து பிரதி எடுத்துக் கொள்ளலாம். நேர்காணல் நடைபெறும் தேதியும் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி பெறுபவர்களுக்கான மாதாந்திர உதவித் தொகையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. அதன்படி பொறியியல் பட்டதாரிகளுக்கு ரூ.4,984 ஆகவும், பட்டய படிப்பு முடித்தோருக்கு ரூ.3,542 ஆகவும், பிளஸ் டூ முடித்தோருக்கு ரூ.2,785 ஆகவும் உதவித்தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு டிசம்பர் 23-ம் தேதியிலிருந்து அமலுக்கு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

CH-X

www.tnebes.org

29.1.2015

### தொழில் பயிற்சிக்கு தகுதிபெற்றவர்கள்

# அழைப்புக் கடிதத்தை இணையத்தில் பதிவிறக்கலாம்

## வாரிய இயக்குநர் பேட்டி

**சென்னை, ஜன. 29–**

தொழில் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் இணையத்தில் அழைப்புக் கடிதத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று வாரிய இயக்குநர் தெரிவித்தார்.

இது குறித்து தொழில் பயிற்சி வாரிய இயக்குநர் ஐய்யாகண்ணு சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம், தமிழ்நாடு ஒலிபரப்பு கழகம் ஆகியவற்றின் சார்பில் தொழில் பயிற்சிக்கான தகுதி தேர்வு நான்கு கட்டமாக நடைபெற உள்ளது. முதல் கட்ட தேர்வு வேலூரில் வருகிற 2ம் தேதி முதல் 6ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இதற்கு தகுதி பெற்றவர்கள் தங்களுக்கான அழைப்புக் கடிதத்தை இன்று முதல் இணையத்தின் வாயிலாக எளிய முறையில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மற்ற மாவட்டங்களுக்கான தேர்வு அட்டவணையை இந்த வாரியத்தின் இணைய தளத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

கிராமப்புற மாணவ மாணவிகள் எந்தவித தடையும் இன்றி தொழில் பயிற்சி பெற்றிட தென் மண்டல தொழில் பயிற்சி வாரியம் ஒருங்கிணைந்த நேர்காணல் நிகழ்ச்சியினை பல்வேறு இடங்களில் நடத்தி வருகிறது. அந்த வகையில் வரும் 31ம் தேதி லதா மாதவன் பொறியியல் கல்லூரி, கிடாரிப்பட்டி, அழகர்கோவில், மதுரையில் அதனை தொடர்ந்து பிப்ரவரி 2015ல் திருவண்ணாமலை மற்றும் ஆத்தூர் பகுதிகளிலும் நேர்காணல் நிகழ்ச்சியினை நடத்த திட்டமிட்டுள்ளது.

பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும், பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கும் ரூ.3,542 ஊக்கத் தொகையாக அளிக்கப்படும். பட்டயப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.2,890, 12ம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு ரூ.2,758 வழங்கப்படும். இதற்கான ஆணையை மத்திய அரசு கடந்த 23ம் தேதி வெளியிட்டுள்ளது. மாதம்தோறும் அளிக்கப்படும் ஊக்கத் தொகையில் 50 சதவீதத்தை மத்திய அரசு தொழில் பயிற்சி வாரியம் வழியாக தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கும். கடந்த நிதி ஆண்டில் தொழில் நிறுவனங்களுக்கு இந்த வாரியம் ரூ.33 கோடி அளித்துள்ளது. இந்த நிதி ஆண்டில் ரூ.50 கோடி அளிக்கும். நடப்பு ஐந்தாண்டு திட்டத்தில் தென் மண்டல தொழில் பயிற்சி வாரியம் 5 லட்சம் பேருக்கு தொழில் பயிற்சி அளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, தென் மண்டல பத்திரிகை தகவல் அலுவலகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் ரவீந்திரன் உடன் இருந்தார்.

www.tnebes.org